1986 மே 8]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு அமைய இருக்கிறது என்பதை அரசாங்கம்தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் 'பி' யூனிட் போன்றவை எல்லாம் சேலத்தில் மோகனூரில் போட இருக்கிறது. திருக்கோயிலூரில் சங்கராபுரத்தில் உள்ள கூட்டுறவு ஆலையில் 'பி' யூனிட் போட இருக்கிறது. பெரம்பலூரில் 'பி' யூனிட் இருக்கிறது. இராமநாதபுரத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் ஒரு 'பி" யூனிட் போட இருக்கிறது.

மத்திய பாட புத்தக வங்கி.

707—(* வினா எண் 5014) திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவசப் பாடப் புத்தங்ககள் வழங்கும் திட்டத்தை மையமாக வைத்து 'மத்திய பாடபுத்தக வங்கி' (Central Text Book Bank) ஏற்படுத்த அரசிடம் ஏதேனும் செயல்திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தற்போது முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின்கீழ் 1 முதல் 8 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குவதாலும், பெரும்பாலான பள்ளிகளில் தனித்தனியாக புத்தக வங்கிகள் செயல்பட்டு வருவதாலும் இலவச பாட திட்டத்தை மையமாக வைத்து மத்திய பாடப் புத்தக வங்கி (Central Text Book Bank) என்று தனியாக ஏற்படுத்த அவசியமில்லை என அரசு கருதுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பள்ளிக்கூடங்களிலேயே இப்படிப்பட்ட பாடப் புத்தக வங்கிகள் செயல்பட்டு வந்தாலும் அது அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவர்களின் தேவையை ஓரளவுக்குத்தான் பூர்த்தி செய்யமுடியும் என்று நான் கருதுகிறேன். நான் கேட்க விரும்புவதெல்லாம் இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட இலவசப் பாடப்புத்தகங்களை ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு கொடுத்து

[1986 மே 8

வருகிறார்கள். இப்படி ஆண்டுதோறும் வழங்கப்படும் புத்தகங்கள் சிறிதளவுக்காவது சாப்ளஸாக இருக்கக்கூடிய நிலைமை நிச்சயமாக இருக்கும். எனவே அந்தப் புத்தகங்களைப் பயன் படுத்தி அதோடு சேவை நிறுவனங்களிலிருந்து கிடைக்கிற அந்தப் புத்தகங்களையும் பயன்படுத்தி மாவட்டங்கள்தோறும் மைய நூலகம் இருப்பதுபோல் இதிலே கூட இப்படிப்பட்ட ஒரு சென்ட்ரல் புக் பாங்கை அமைத்து அபபடி பள்ளிக்கூடங்களில் புத்தகங்கள் கிடைக்கிற வாய்ப்பு இல்லாதவர்களுக்கு அல்லது கிடைக்காதிருப்பவர்களுக்கு வேண்டுமென்றால் பதிவுபெற்ற அதிகாரியிடமிருந்து அல்லது அந்தப் பள்ளி தலைமை ஆசிரியரிட மிருந்து சான்றிதழ் பெற்று வருகிற மாணவ மாணவியருக்கு மாவட்டந்தோறும் அப்படிக் கொடுத்து உதவுகிற திட்டத்தை, தேவைப்பட்டால், சிறந்தது என்று கருதினால் அதுபற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டதொரு திட்டம் அரசினுடைய ஆய்விலே இல்லை. இப்போது தரப்படுகிற இந்த இலவசப் பாடப் புத்தகங்களை நாம் மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டு வருகிறோம். ஆகவே இப்படிப்பட்ட புக் பாங்கினை பள்ளிக் கூடங்களில் நாம் வைத்து செயல்படுத்துகிற யோசனை எதுவும் இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடங்களிலே செயல்படுத்தப்பட்டு வருகிற இந்தப் பாடப் புத்தக வங்கித் திட்டம் ஒரு அருமையான திட்டம். அந்தத் திட்டம் கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியால் கொண்டுவரப்பட்டிருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் மட்டுமே செயல்படுத்தி வருவதாக அல்லது அமல்படுத்தப்பட்டு வருவதாக அறிகிறேன். தனியார் நடத்துகிற பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட பாடப் புத்தக வங்கிகளை நடத்துவதற்கு அவர்களை அறிவுறுத்துவார்களா? அதற்கு ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1986 மே 8]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அவரவர்கள் இஷ்டப்படுகிற பள்ளிக் கூடங்களில் அதை அவர்கள் நடத்துவதற்கு நாம் எதுவும் தடை விதிக்கவில்லை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் இலவசமாகப் புத்தகங்கள் கொடுப்பது நல்லதொரு திட்டமாகும். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தப் புத்தகங்கள் வழங்குகிறபோது சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் தமிழ் புத்தகம் கிடைத்தால் ஆங்கிலம் கிடைக்கவில்லை, ஆங்கிலப் புத்தகம் கிடைத்தால் தமிழ் கிடைக்கவில்லை என்று இப்படி தொடர்ச்சியாக இந்தப் புத்தகங்கள் கொடுப்பதில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக மாணவ மாணவியர் படிப்பதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. எனவே இதைக் கருத்தில்கொண்டு இந்த ஆண்டு கல்விக்கூடங்கள் திறந்தவுடன் ஜூனில் திறந்தால் குறைந்தபட்சம் ஜூலை மாதம் 15-ம் தேதிக்குள்ளாக தனித் தனியாக இல்லாமல் மொத்தமாக எல்லாப் பாடப் புத்தகங்களும் கிடைக்கக்கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த ஆண்டு அப்படி வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் முதன்முதலாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தோம். அதன் காரணமாக பல குறை பாடுகள் இருந்தன. இந்த ஆண்டு அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் குறித்த காலத்திலே இந்த மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்கள் கிடைக்க அரசாங்கம் ஆவன செய்யும்.